# மில்ரன் கீனஸ் முருகன் ஆலய அறக்கட்டளை

## யாப்பு

(ஆறாவது வரைபு – ஆவணி, 2010)

**ஷரத்து 1 : பெயர்**

இந்த ஸ்தாபனத்தினுடைய பெயரானது மில்ரன் கீனஸ் முருகன் ஆலய அறக்கட்டளை எனப்படுவதுடன் இதன் கீழே அறக்கட்டளை எனவும் குறிப்பிடப்படும்.

**ஷரத்து 2 : ஆலயத்தினுடையதும் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தினுடையதும் அமைவிடம்**

2.1 இந்த ஆலயத்தினுடைய தற்காலிக அமைவிடமானது லோட்டன் ஞாபகார்த்த மண்டபம், பிரட்வெல் வீதி, லோட்டன், மில்ரன் கீனஸ், MK5 6JE, ஐக்கிய இராச்சியம் ஆகும். நல்லதொரு காரணத்துக்காகவும் தேவையேற்படுமிடத்தும் ஆலயத்தினை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கான உரிமையை தர்மகர்த்தாக்கள் கெண்டிருப்பர்.

2.2 இந்த அறக்கட்டளையினுடைய பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது 54, மாயி டிக்ஸ் வீதி, ரஸ்டன், நோத்அம்ரன்சயர், NN10 0YT இல் அமைந்திருக்கும்.

2.3 இந்த அறக்கட்டளையினுடைய தர்மகர்த்தாக்கள் சபையினரின் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றினால் மட்டுமே இந்த பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இடமாற்றப்பட முடியும்.

2.4 இந்த பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தினுடைய எந்தவொரு மாற்றமும் அவ்வாறான முகவரியில் மாற்றம் ஏற்பட்டு ஒருமாத காலத்தினுள் திறைசேரி ஏற்பாடுகளில் சொல்லப்பட்டுள்ள படிவத்தின் மூலம் தரும ஸ்தாபன ஆணையாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**ஷரத்து 3 : சொத்துரிமை**

3.1 ஷரத்து 19இல் கூறப்பட்டுள்ளவாறு இல்லாதாக்கப்பட்டாலன்றி இந்த அறக்கட்டளையானது மில்ரன் கீனஸில் நிலைத்திருக்க வேண்டும் என்பது இதனுடைய ஸ்தாபக அங்கத்தவர்கள் அனைவரினதும் பேரவாவாகும்.

3.2 இந்த அறக்கட்டளையானது இங்கிலாந்தினதும் வேல்ஸினதும் அதிகாரவரம்பிற்குட்பட்ட தருமநிறுவனமொன்றாக நீடித்திருந்து இயங்கும்.

**ஷரத்து 4 : குறிக்கோள்கள்**

4.1 கூட்டுப்பிரார்த்தனை, வழிபாடு மற்றும் பிரசங்கங்களின் மூலமாக இந்து சமயத்தினையும் அதனுடைய சித்தாந்தங்கள் மற்றும் வேதாகமங்களையும் வளர்ச்சியுறச் செய்தல் மற்றும் இந்து சமய நம்பிக்கைகளைக் கைக்கொள்ளுதல்.

4.2 வழிபாட்டிற்குரிய தெய்வீகமான இடமாக ஆலயத்தினை நிறுவிப் பராமரித்தல் மற்றும் வழமையான இந்துசமயப் பிரார்த்தனை மற்றும் தெய்வீக நடவடிக்கைகள் மூலம் பக்தர்களை ஊக்குவித்தல்.

4.3 பரம்பரையான இந்து கலாச்சார நிகழ்வுகள், சமயக் கல்வி மற்றும் கலை நிகழ்வுகளை முன்னெடுத்தல்.

4.4 சமுதாயத்தில் உள்ளவர்களான மக்கள் அனைவரிடத்தும் நல்லெண்ணம், நட்புணர்வு, சமதாய ஒருங்கிணைப்பு ஏற்பட ஊக்கத்துடன் ஒத்துழைத்தல் மற்றும் அதற்கான வசதிகளை வழங்குதல்.

**ஷரத்து 5 : நிருவாகம்**

இந்த யாப்பின் ஷரத்து 9இல் கூறப்பட்டுள்ளவாறு அமைக்கப்பட்ட தர்மகர்த்தாக்கள் சபையினரின் (சபை) அங்கத்தவர்களினால் இந்த அறக்கட்டளையும் அதன் சொத்துக்களும் நிருவகிக்கப்படவேண்டிய வழிமுறைகள் இதன்கீழே விபரிக்கப்பட்டள்ளன.

5.1 அங்கத்துவக் கட்டணம், அன்பளிப்புகள், உயிலின் மூலம் பெறப்பட்டவை, காணிக்கைகள், அர்ச்சனைப்பற்றுச்சீட்டுக்கள் மற்றும் பணப்பரிசுகள் மற்றும் வேறுவழிகள் மூலம் பெறப்பட்ட பணம் முழுவதும் அறக்கட்டளையினுடைய சொத்தாகும் என்பதுடன் தர்மகர்த்தாக்கள் சபையினர், அலுவலர்கள், சாதரண அங்கத்தவர்கள், வேலையாட்கள் மற்றும் தனிநபர்களின் தேவைகளுக்காக பயன்படத்தப்படுதல் ஆகாது. அறக்கட்டளையினுடைய கடமைகளைச் செய்வதற்காக அல்லது மேலே சொல்லப்பட்ட குறிக்கோள்களை முன்னெடுப்பதற்காகச் செய்யப்பட்ட நியாயமான செலவு ஒன்றிற்காக தனிநபர் ஒருவருக்கு அல்லது குழுவினருக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டவாறு கொடுப்பனவு ஒன்றினைச் செய்வதற்கு தர்மகர்த்தாக்கள் சபையினர் அநுமதியளிக்கலாம்.

5.2 அறக்கட்டளையினுடைய வருமானமும் சொத்துக்களும் குறிக்கோள்களை முன்னெடுக்கும் நோக்கில் மாத்திரமே பாவிக்கப்படலாம்.

**ஷரத்து 6 : அதிகாரம்**

குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக அறக்கட்டளையானது பின்வரும் அதிகாரங்களைப் பயன்படுத்தலாமேயல்லாது வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தலாகாது.

6.1 மில்ரன் கீனஸில் உள்ள போதுமான அளவு வசதிகளுள்ள நிரந்தரமான இடம் ஒன்றிற்கு ஆலயத்தினை கொண்டு செல்லுதல் மற்றும் தொடர்ந்து நடத்திச் செல்லுதல்.

6.2 பக்தர்களினுடையதும் ஏனையவர்களினுடையதும் சமுதாய / கல்வித்தேவைகளுக்காக சனசமூக நிலையம் ஒன்றினை நிறுவுதல் மற்றும் அந்நிலையத்தை பரந்துபட்ட சமூகத்துடன் சமுதாய நல்லிணக்கம் ஏற்பட பயன்படுத்துதல்.

6.3 குறிக்கோள்களை எய்துவதற்காக எந்தவொரு சொத்தினையும் வாங்குதல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது பரிமாற்றம் செய்தல், பராமரித்தல் மற்றும் பாவனைக்காக அதனை ஆயத்தம் செய்தல்.

6.4 மேலே சொல்லப்பட்ட தேவைகளுக்காக நிரந்தரமான இலாபநோக்குள்ள வியாபார மற்றும் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் நிதி சேகரித்தல் மற்றும் தனிநபர் அல்லது நபர்களிடமிருந்து நன்கொடைகளைக் கேட்டலும் பெற்றுக்கொள்ளுதலும்.

6.5 சட்டத்தின் தேவையேற்படுமிடத்து ஆலயத்தினுடைய சொத்து முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ விற்றல், குத்தகைக்கு விடுதல் அல்லது இல்லாதழித்தல்.

6.6 சட்டத்தின் தேவையேற்படுமிடத்து பணத்தை கடன் வாங்குதல், அவ்வாறு வாங்கப்பட்ட பணத்தை மீளக்கொடுப்பனவு செய்வதற்காக ஆலயத்தினுடைய சொத்து முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ பயன்படுத்துதல்.

6.7 குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக பொருத்தமானவர்களை (அவர்கள் சபை அங்கத்தவர்கள் இல்லாவிட்டாலும்) அமர்த்துதல்.

6.8 இதேமாதிரியான குறிக்கோள்களையுடைய அல்லது இதேமாதிரியான தரும நோக்கங்கொண்ட மற்றைய தரும ஸ்தாபனங்கள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் சட்டரீதியான அதிகாரமுடையவர்களுடன் ஒத்துழைத்தல், தகவல்கள் மற்றும் ஆலோசனைகளைப் பரிமாறுதல்.

6.9 சபை பொருத்தமானது எனக்கருதும் ஆலோசனைக்குழுக்களை நியமித்தல் மற்றும் வழிநடத்துதல்.

6.10 மேலே சொல்லப்பட்ட குறிக்கோள்களை பாதிக்கக்கூடிய அனைத்து விடயங்கள் சம்மந்தமான தகவல்களையும் சேகரித்து பரப்புதல் மற்றும் அவ்வாறான தகவல்களை ஐக்கிய இராச்சியத்திலோ அல்லது கடல்கடந்தோ இயங்கும் இதேமாதிரியான குறிக்கோள்களையுடைய நிறுவனங்களுடன் பரிமாறுதல்.

6.11 மேலே சொல்லப்பட்ட குறிக்கோள்களை எழுதி, அச்சுப்பிரதி செய்து அல்லது மீள்பிரதி செய்து இலவசமாகவோ அல்லது வேறு வகையிலோ வழங்குதல் (எழுதியவர்கள் அல்லது நிகழ்வுகளை நடத்தியவரகள் / அவர்களுடைய பிரதிநிதிகளுடைய காப்புரிமை விதிகளுக்கு உட்பட்டு).

6.12 மேலே சொல்லப்பட்ட குறிக்கோள்களுக்காக உடனடியாயத் தேவைப்படாத அறக்கட்டளையினுடைய பணத்தினை சபை பொருத்தமானது எனக்கருதும் முதலீடுகள், கடன் பத்திரங்கள் மற்றும் சொத்துக்களில் அல்லது அவ்வாறானவற்றில், தற்போது நடைமுறையிலுள்ளதும் காலத்துக்குக் காலம் அதிகாரபூர்வமாக விதிக்கப்படுகின்றதுமான (ஏதாவது இருப்பின்) சட்டதிட்டங்களுக்குட்பட்டு முதலீடு செய்தல்.

6.13 காலத்துக்குக் காலம் சபை பொருத்தமானது எனக்கருதும் காப்புறுதியை தீர்மானித்தல், போதியளவு காப்புறுதி செய்தல், மூன்றாம் நபர் பற்றுக்கள் / பொறுப்புக்களில் இருந்து விடுவித்தல்.

6.14 தங்களுடைய நடவடிக்கைகளைச் செய்வதற்காக காலத்துக்குக் காலம் தேவையான விதிகளையும் உபவிதிகளையும் உருவாக்குதல்.

6.15 விதிகளையும் உபவிதிகளையும் அங்கத்தவர்களுக்கும் ஆலயத்துக்கு வருபவர்களுக்கும் தெரியப்படுத்துவதற்காக சபை போதுமானது எனக்கருதும் அனைத்து வழிவகைகளையும் ஏற்படுத்துதல்.

6.16 விதிகளும் உபவிதிகளும் அங்கத்தவர்கள் மற்றும் ஆலயத்துக்கு வருபவர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தும்.

6.17 மேலே சொல்லப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவையான நீதியான ஏனைய அனைத்தையும் செய்தல்.

**ஷரத்து 7 : கட்டுப்பாடுகள்**

7.1 ஆலய வளவும் அதன் பிரகாரமும் சமய தேவைகளுக்காக அல்லது இந்து கலாச்சார நடவடிக்கைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படவேண்டுமேயன்றி வேறெதற்குமோ அல்லது அரசியல் பிரச்சாரத்திற்கோ பயன்படுத்தப்படலாகாது.

7.2 மரக்கறி அல்லாத உணவுவகைகள், மதுபானமுள்ள குடிவகைகள், கட்டுப்படுத்தப்பட்ட பண்டங்கள் அல்லது சுருட்டு / புகை பொருட்களை ஆலய வளவுக்குள் கொண்டுவருதலும் பாவித்தலும் தடைசெய்யப்பட்டுள்ளது. இத்தடையானது தர்மகர்த்தாக்களினால் எல்லா நேரங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதுடன் எந்தவொரு மீறலும் அந்த நேரத்துக்குப் பொருத்தமான வகையில் கையாளப்படவேண்டும். ஆலயமானது வழிபாட்டிற்குரிய புனிதமான இடமாக இருப்பதால் பக்தர்கள், விருந்தினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரும் ஆலய பிரகாரத்திற்குள் நுழைவதற்கு முன்னர், உட்புகும் இடத்திற்கு அருகே அதற்காக குறித்தொதுக்கப்பட்ட இடத்தில் தத்தமது பாதணிகளை வைத்துவிடவேண்டும்.

7.3 ஆலயமானது அதனுடைய தன்னிகரில்லாத பண்புகளினால் அடியார்கள் வரத்தினையும் முத்தியையும் வேண்டி பிரார்த்தனையும் சடங்குகளும் பூஜையும் செய்யும் இடமாதலினால் அவ்வாறான இயல்புகளைப் பாதுகாப்பதற்காக பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இடையூறு செய்யாவண்ணமும் நியாயமான அமைதியுடனும் பக்தர்களும் அவர்களுடைய குழந்தைகளும் இருக்கவேண்டும்.

**ஷரத்து 8 : அங்கத்துவம்**

8.1 எந்தவொரு நபரும் பின்வரும் நிபந்தனைகளுக்கிணங்க அறக்கட்டளையினுடைய அங்கத்துவராகலாம்:

8.1.1 வயதில் பதினெட்டு வருடங்களினையடைந்த ஒருவர்.

8.1.2 இந்து மதத்தில் அசையாத நம்பிக்கையுள்ள ஒருவர்.

8.1.3 வயதில் பதினெட்டு வருடங்களினையடையாத அறக்கட்டளையினுடைய வேலைகளை முன்னெடுப்பதில் ஆர்வமுள்ள ஒருவர் கனிஷ்ட அங்கத்துவராகலாம். கனிஷ்ட அங்கத்துவரொருவர் வாக்களிப்பதற்குத் தகுதியற்றவர்.

8.1.4 காலத்துக்குக் காலம் அறக்கட்டளையினால் குறிக்கப்படுகின்ற சந்தாப்பணத்தினைக் கொடுப்பனவு செய்த ஒருவர்.

8.2 அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் ஒரு வாக்கினைக் கொண்டிருப்பர்.

8.3 எந்தவொரு தனிநபருடைய அங்கத்துவத்தினையும் நல்லதொரு காரணத்துக்காக ஏகமனதாக வாக்களிப்பதன்மூலம் அறக்கட்டளையானது முடிவுறுத்தலாம் எனினும் இறுதித் தீர்மானம் ஒன்றினை எடுப்பதற்கு முன் அந்த நபருக்கு தன்னுடைய தரப்பினை அறக்கட்டளைக்கு எடுத்துச்சொல்வதற்கும் நண்பர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும்.

8.4 அங்கத்துவமானது எவரொருவருக்கும் மாற்றப்படலாகாது.

8.5 எந்தவொரு அங்கத்துவருக்கும் கேட்கும்பொழுது கிடைக்கக்கூடியதாக அங்கத்துவர்கள் அனைவருடைய பெயர் முகவரி அடங்கிய பதிவுப் புத்தகம் ஒன்று அறக்கட்டளையினால் பேணப்படல்வேண்டும்.

8.6 அங்கத்துவ வகைகள்:

8.6.1 வருடாந்த அங்கத்தவர் : வருடாந்த அங்கத்தவர் பொருத்தமான வருடாந்த சந்தாப்பணத்தினைக் கொடுப்பனவு செய்த பின்னர் ஒரு பஞ்சாங்க வருடத்திற்கு அங்கத்துவ வரப்பிரசாதங்களை அநுபவிக்கலாம். எந்தவொரு அங்கத்தவரும் ஒரு (1) வருடத்திற்கு மேற்பட்ட சந்தாப்பணத்தினைக் கொடுப்பனவு செய்யாதவிடத்து அவருடைய அங்கத்துவத்தினை இழந்துவிடுவர்.

8.6.2 ஐந்து வருட அங்கத்தவர் : ஐந்து வருட அங்கத்தவர் பொருத்தமான ஐந்து வருட சந்தாப்பணத்தினைக் கொடுப்பனவு செய்த மாதத்திலிருந்து ஐந்து வருடங்களிற்கு அங்கத்துவ வரப்பிரசாதங்களை அநுபவிக்கலாம்.

8.6.3 ஆயுட்கால அங்கத்தவர் : பொருத்தமான நன்கொடையைக் கொடுப்பனவு செய்த பின்னர் ஆயுட்கால அங்கத்தவர் ஒருவர் அங்கத்துவ வரப்பிரசாதங்களை அவருடைய ஆயள் முழுவதும் அநுபவிக்கலாம்.

8.6.4 கௌரவ அங்கத்தவர் : இந்து சமய விவகாரங்களுக்கு பங்களிப்பு செய்தவரும் / அல்லது ஆலயத்திற்கு பணக்கொடுப்பனவுகளைச் செய்தவருமான மேன்மை தங்கிய ஒருவருக்கு சபையானது 'கௌரவ அங்கத்தவர்' தகுதியை வழங்கலாம்.

8.7 மேம்படுத்துதல் : ஆயுட்கால அங்கத்தவரல்லாத ஏற்கனவே அங்கத்தவராக உள்ள ஒருவர் அவருடைய அங்கத்துவத்தினை அவருடைய தற்போதைய அங்கத்துவ காலத்தினுள் சந்தாப்பணத்தின் வித்தியாசத்தினைக் கொடுப்பனவு செய்வதன் மூலம் மேம்படுத்தலாம். சந்தாப்பணத்தின் வித்தியாசமானது மூன்றிற்கு மேற்படாத தவணைகளில் செலுத்தப்படுதல் வேண்டும்.

8.8 இராஜினாமா : அங்கத்துவத்தில் இருந்து விலக விரும்பும் எந்தவொரு அங்கத்தவரும் அவருடைய இராஜினாமாவினை எழுத்துமூலமாகவோ, இலத்திரனியல் கடிதமூலமாகவோ, தொலைநகல் மூலமாகவோ அல்லது வேறு சட்டரீதியான வழிகளினூடாகவோ தர்மகர்த்தாக்கள் சபையினருக்கு சமர்ப்பிக்கவேண்டும். சபையினருடைய அநுமதி கிடைத்ததும் செயலாளர் அங்கத்துவ பதிவுப் புத்தகத்தில் இருந்து அங்கத்தவரை நீக்குவார்.

## ஷரத்து 9 : தர்மகர்த்தாக்கள் சபை

9.1 'சபை' எனக்குறிப்பிடப்படும் தர்மகர்த்தாக்கள் சபையானது பதினொரு (11) ஸ்தாபக அங்கத்தவர்களையும் (பெயர்ப் பட்டியல் அநுபந்தம் 1 இல் இணைக்கப்பட்டுள்ளது) வருடாந்த பொதுக்கூட்டத்தில் நல்ல நிலையில் உள்ளவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஏழு (7) அங்கத்தவர்களையும் கொண்டிருக்கும். ஸ்தாபக அங்கத்தவர்கள் முதலாவது முன்னுரிமையைக் கொண்டுள்ள தர்மகர்த்தாக்களாவர்

9.2 சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் வருடாந்த பொதுக்கூட்டம் முடிவடைந்ததில் இருந்து மூன்று வருடகாலத்திற்கு தர்மகர்த்தாக்களாக இருக்கவேண்டும். அவர்களுடைய சேவைக்காலத்தின் முடிவில் அவர்கள் மீளத் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியுடையவர்களாவர்கள்.

9.3 எதிர்காலத்தில் தேவையேற்படும்போது தர்மகர்த்தாக்கள் சபையினை சிறப்பாக நடத்துவதற்காக மூன்றிற்கு (3) மேற்படாத மேலதிக தர்மகர்த்தாக்களை நியமிப்பதற்கான உரிமையை தர்மகர்த்தாக்கள் சபை கொண்டிருக்கும்.

9.4 தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியவர்கள் பிரதான கௌரவ சபை அங்கத்தவர்கள் ஆவர்கள். அவர்கள் தேர்தலுக்கு முன்னரே பொருத்தமானவர்கள் எனத் தீர்மானிக்கப்பட்டு ஏனைய அங்கத்தவர்களுடன் தெரிவு செய்யப்படலாம்.

9.5 ஆலய விவகாரங்களை செயற்படுத்துவதற்காக செயற்குழு ஒன்று தர்மகர்த்தாக்கள் சபையினால் நியமிக்கப்படலாம்.

9.6 தர்மகர்த்தாக்கள சபையின் தலைவரானவர் பதவியின் காரணமாக செயற்குழுவின் தலைவராக இருப்பார்.

9.7 மேலே சொல்லப்பட்ட குறிக்கோள்கள் அடையப்படுகின்றன என்பதனையும் ஆலயமும் சனசமூக நிலையமும் யாப்பிற்கிணங்க இயங்குகின்றன என்பதனையும் சொத்துக்கள், வருமானங்கள், செலவுகள் மற்றும் நடவடிக்கைகள் அறக்கட்டளையினுடைய பயனாளிகளின் நலனுக்காக நிருவகிக்கப்படுகின்றது என்பதனையும் உறுதிப்படுத்துகின்ற பொறுப்பு தர்மகர்த்தாக்கள் சபையினருக்கு உண்டு.

9.8 தெரிவு செய்யப்பட்ட தர்மகர்த்தா ஒருவர் இறந்தால் / பதவியில் இருந்து விலகினால் அல்லது பதவியிலிருந்து விலக்கப்பட்டால் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக வருகை தந்திருக்கின்ற பொதுக்குழு அங்கத்தவர்களில் பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கத் தகுதியுடையவர்களின் பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின்மூலம் இன்னொருவரை நியமிக்க வேண்டும்.

- 9.8.1 அறக்கட்டளையினுடைய ஆயுட்கால அங்கத்தவர் ஒருவர்.
- 9.8.2 முப்பத்தைந்து வருடங்களிற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒருவர்.
- 9.8.3 இந்த அறக்கட்டளையினுடைய குறிக்கோளைப்போன்ற குறிக்கோளையுடைய வேறேதேனும் தர்மஸ்தாபனம் ஒன்றின் தர்மகர்த்தாவாக இருந்திருக்காத அல்லது இல்லாத ஒருவர்.

9.9 தர்மகர்த்தா ஒருவரை நியமிக்கின்ற ஒவ்வொரு தீர்மானமும் அவ்வாறான ஒருவரை நியமித்த கூட்டத்தினுடைய கூட்டக்குறிப்பில் எழுதப்பட்டு தர்மகர்த்தாக்களினால் கையொப்பமிடப்பட்ட அத்தீர்மானத்தினுடைய பிரதியொன்று அறக்கட்டளையினுடைய செயலாளரினால் 14 நாட்களுக்குள் தரும ஸ்தாபன ஆணையாளருக்கு முன்வைக்கப்படுதல் வேண்டும்.

9.10 தர்மகர்த்தாக்கள் ஆனவர்களை அறக்கட்டளைச்சட்டத்தின் கீழ் நிர்வகித்தல் வேண்டும்.

9.11 அறக்கட்டளைக்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களையும் அறக்கட்டளையினுடையதும் அதனுடைய அங்கத்தவர்களினுடையதும் பாவனைக்காகவும் மற்றும் தேவைகளுக்காகவும் கொடுப்பதற்கு அந்தந்த நேரத்தில் அறக்கட்டளையினுடைய தர்மகர்த்தாக்களாக இருப்பவர்களுக்கு இந்த யாப்பு விதிகளின்படி அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

9.12 தர்மகர்த்தாக்களில் எவரொருவரும் அறக்கட்டளைக்கு / அறக்கட்டளையிலிருந்து அசையாச்சொத்தொன்றினை வாங்குவதற்கு, விற்பதற்கு அல்லது மாற்றுவதற்கு முடியாதென்பதுடன் அவ்வாறு வாங்குவதற்கு அல்லது விற்பதற்கு முயற்சி செய்யும் எந்தவொரு தர்மகர்த்தாவும் அறக்கட்டளையினுடய நிதியினை துஷ்பிரயோகம் செய்தமைக்காக / சட்டவிரேதமாகப் பயன்படுத்தியமைக்காக எந்தவொரு பொறுப்புமில்லாமல் அவரது பதவியில் இருந்து நீக்கப்படலாம்.

9.13 நியமிக்கப்பட்ட மற்றும் கௌரவ அங்கத்தவர்களுடைய அங்கத்துவமானது நியாயமான காரணமொன்றுக்காக கூட்டம் நடத்துவதற்கு தேவையான அங்கத்தவர்களுடன் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் வருகை தந்திருந்த அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு (2/3) பெரும்பான்மையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின்மூலம் இரத்துச் செய்யப்படலாம்.

9.14 சபையானது ஆலயத்தினை நடத்திச் செல்வதற்கு பிரயோசனமான விசேட தகுதிகளையும் திறமைகளையும் கொண்ட இரண்டிற்கு (2) மேற்படாத அங்கத்தவர்களை சபைக்கு மேலதிகமாகச் சேர்த்துக்கொள்ளலாம். எனினும் மேலதிகமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட இந்த அங்கத்தவர்கள் தமது சேவைக்காலத்தில் வாக்குரிமையை அல்லது பிரேரணை மேற்கொள்ளும் உரிமையை கொண்டிருக்கமாட்டார்கள்.

9.15 சபைக்கு தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட யாராவது அங்கத்தவர் ஒருவர் சபையினுடைய தொடர்ச்சியான இரண்டு (2) கூட்டங்களுக்கு அவருடைய / அவளுடைய வருகையின்மைக்கான காரணம்பற்றி தலைவர் அல்லது செயலாளருக்கு முன்னரே அறிவிக்காதவிடத்து அவருடைய / அவளுடைய தர்மகர்த்தாவுக்கான அங்கத்துவம் முடிவுறுத்தப்படலாம். அங்கத்தவர்கள் அனைவருடையதும் வருகையினை செயலாளர் பதிவு செய்ய வேண்டும். ஏதாவது ஒரு பஞ்சாங்க வருடத்தில் நடைபெற்ற கூட்டங்களில் ஆகக்குறைந்தது 60% க்கு வருகைதராத தர்மகர்த்தாக்களுடைய பதவியானது அவர்களுடைய மீதிப்பதவிக்காலத்திற்கு இடைநிறுத்தப்படும்.

9.16 இராஜினாமா : தர்மகர்த்தா சபையில் இருந்து இராஜினாமா செய்ய விரும்பும் எந்தவொரு அங்கத்தவரும் அவருடைய / அவளுடைய இராஜினாமாவினை சபையின் செயலாளருக்கு முகவரியிட்டு எழுத்துமூலமாக சமர்ப்பிக்கவேண்டும். இந்த தகவல் தலைவருக்கு கிடைத்தவுடன் சபையினுடைய கூட்டம் ஒன்றினைக் கூட்டி அல்லது ஏனைய தர்மகர்த்தாக்களுக்கு நிலைமையினை அறிவிப்பதன் மூலம் பொருத்தமான முறையில் எல்லாக்கடமைகளில் இருந்தும் அங்கத்தவரை துரிதமாக விடுவிக்க வேண்டும்.

**ஷரத்து 10 : செயற்குழு**

10.1 செயற்குழுவானது தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், இணைச்செயலாளர், உதவிப்பொருளாளர் ஆகியவர்களைக் கொண்டிருக்கும்.

10.2 செயற்குழுவானது தர்மகர்த்தாக்கள் சபை எடுக்கும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதுடன் அறக்கட்டளை மற்றும் சனசமூகநிலைய விவகாரங்களை முகாமைத்துவம் செய்யும்.

10.3 செயற்குழுவில் ஏற்படும் ஏதாவதொரு தற்காலிக வெற்றிடமானது தேர்தல் முறையொன்றின் மூலம் தர்மகர்த்தாக்கள் சபையினால் நிரப்பப்படும்.

10.4 செயற்குழுவின் கூட்ட நடவடிக்கையானது அங்கத்தவர் ஒருவரின் வெற்றிடம் அல்லது நியமனம் செய்யப்படாமை அல்லது நியமனத்தில் இருக்கக்கூடிய தவறுகள் அல்லது தகமைகள் காரணமாக செயலிழக்கச்செய்யப்படலாகாது.

10.5 செயற்குழுவின் கூட்ட அறிக்கைப்புத்தகத்தில் அல்லது ஆலய தர்மகர்த்தாக்கள் சபையினால் அறக்கட்டளையில் சேவையாற்றுவதற்குரிய விருப்பத்தினையும் உறுதிமொழியையும் தெரிவிப்பதற்காக தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் பத்திரத்தில் கையொப்பம் இடும்வரை எந்தவொரு நபரும் முதலாவதாகவோ அல்லது அதன் தொடர்ச்சியாகவோ செயற்குழுவில் அங்கத்தவராக செயற்படமுடியாது.

10.6 தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவர்(ஷரத்து 9.6), உபதலைவர், செயலாளர், இணைச்செயலாளர், பொருளாளர் மற்றும் உதவிப்பொருளாளர் ஆகியோர் அவர்களின் பதவி காரணமாக செயற்குழுவில் அங்கம்பெறுவார்கள்.

**ஷரத்து 11 : உறுப்பினர்களின் கடமைகள்**

ஆலய தர்மகர்த்தா சபையின் அலுவலர்கள் அனைவரும் கௌரவ அலுவலர்கள் என்பதுடன் தெரிவு செய்யப்படும் பதவியில் உள்ள எவருக்கும் எந்தவொரு ஊதியமும் கொடுபடலாகாது.

11.1 செயற்குழுவினுடைய உறுப்பினர்களின் தகமைகள்:

11.1.1 இந்து மதத்தினைச் சேரந்த ஒருவராக இருத்தல் வேண்டும்.

11.1.2 அறக்கட்டளையினுடைய சாதாரண அல்லது ஆயுட்கால அங்கத்தவராக இருப்பதுடன் தேர்தலுக்கான வேட்பாளராக நியமிக்கின்ற / விண்ணப்பிக்கின்ற நேரத்தில் அவ்வாறானதொரு அங்கத்தவராக இரண்டு வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதியிலிருந்திருத்தல் வேண்டும்.

11.1.3 இந்த அறக்கட்டளையினுடைய குறிக்கோளைப்போன்ற குறிக்கோளையுடைய வேறேதேனும் தர்மஸ்தாபனம் ஒன்றின் செயற்குழு உறுப்பினராக அல்லது தர்மகர்த்தாவாக இல்லாத ஒருவர்.

11.2 தலைவர் : சபையின் தலைவரானவர் அறக்கட்டளையினுடைய விவகாரங்களை பொதுவாக மேற்பார்வை செய்வதுடன் செயற்குழுவினதும் பொதுக்குழுவினதும் அனைத்து கூட்டங்களிற்கும் தலைமை தாங்கவேண்டும். அவர் செயலாளருடன் இணைந்து தேவையுள்ளது எனக்கருதும் எந்த நேரத்திலும் கூட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுக்கலாம் என்பதுடன் குழுவினுடைய அனைத்து கூட்டங்களினதும் கூட்ட அறிக்கையானது சரியாகப் பதியப்பட்டு அங்கத்தவர்களின் பார்வைக்கு வைக்கப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும். தலைவரானவர் செயலாளர் மற்றும் பொருளாளருடன் இணைந்து ஆலயத்தினுடைய சொத்துக்கள், அடமானங்கள், கடன்பத்திரங்கள் மற்றும் ஒப்பந்தங்களினை செயற்படுத்த வேண்டும். அவர் பக்கச்சார்பற்றவராகவும் அனைத்து கூட்டங்களிலும் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கருத்துக்களை விபரிப்பதற்கும் விவாதிப்பதற்கும் இடமளிக்கவும் வேண்டும்.

11.3 உப தலைவர் : தலைவருடைய கடமைகளில் அவருக்கு உதவுவதுடன் அவரின் வரவின்மையின்போது அவருக்காக செயற்படவும் வேண்டும்.

11.4 செயலாளர் :

11.4.1 அனைத்து ஒன்றுகூடல்களுக்கும் வருகை தர வேண்டும்.

11.4.2 செயற்குழுவினதும் பொதுக்குழுவினதும் அனைத்து கூட்டங்களுக்கும் வருகை தர வேண்டும் என்பதுடன் கூட்ட அறிக்கையையும் பதிந்து வைத்திருக்க வேண்டும்.

11.4.3 அறக்கட்டளையினுடைய நாளாந்த நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அறக்கட்டளையினுடைய சகல கடிதத் தொடர்புகளையும் பேணவும் வேண்டும்.

11.4.4 செயற்குழுவினதும் பொதுக்குழுவினதும் அனைத்து கூட்டங்களையும் கூட்டுவதுடன் அறக்கட்டளையின் சார்பாக அழைப்பிதழ்களையும் அனுப்ப வேண்டும்.

11.4.5 அனைத்து கூட்டங்களிலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்த வேண்டும்.

11.4.6 உபகுழுக்களுடன் தொடர்புகளைப் பேணுவதுடன் ஏனைய குழு உறுப்பினர்கள் / அங்கத்தவர்களிடமிருந்து முன்னேற்ற அறிக்கைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

11.4.7 அறக்கட்டளையினுடைய உத்தியோகத்தர்களை பொதுவாக மேற்பார்வை செய்வதுடன் பிரதம குருக்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுதலும் வேண்டும்.

11.4.8 குறித்த காலப்பகுதியின் முடிவில் பொதுக்கூட்டத்தில் முன்னிலைப்படுத்துவதற்காக பொது அறிக்கையினைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.

11.5 இணைச்செயலாளர் : குழுவின் இணைச்செயலாளர் செயலாளருக்கு அவரின் கடமைகளில் உதவ வேண்டும் என்பதுடன் அவரின் வரவின்மையின்போது அவருக்காக செயற்படவும் வேண்டும்.

11.6 பொருளாளர் : பொருளாளர் ஆலயத்தினுடைய அனைத்து பணம், நிதி மற்றும் சொத்துக்கள் சம்பந்தமான அனைத்தையும் கணக்கெடுத்து ஆவணப்படுத்தி பத்திரப்படுத்த வேண்டும்.

11.6.1 பொருளாளர் ஆனவர் வரவேண்டிய பணத்தை சேகரித்து அதற்கான வரவு செலவுக் கணக்குகளை பதிந்து வைப்பதுடன் அறக்கட்டளையின் பெயரால் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து நிதியையும் குழுவினரால் குறித்தொதுக்கப்பட்ட நிதிநிறுவனம் /ங்கள், கணக்கில் /குகளில் வைப்பிலிடவும் வேண்டும். இந்த கணக்கு /கள் பொருளாளர், செயலாளர் மற்றும் குழுவினுடைய ஸ்தாபக ஆயுட்கால தர்மகர்த்தா ஒருவரின் பெயரில் இணைந்ததாக இருக்க வேண்டும்.

11.6.2 பொருளாளர் அல்லது அதற்காக நியமிக்கப்பட்ட ஒருவர் அறக்கட்டளையின் கணக்கில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து பணத்தையும் ஒரு (1) மாத காலத்தினுள் வைப்பிலிட வேண்டும்.

11.6.3 பொருளாளர் வரவு செலவு சம்பந்தமான நிதிக்கணக்கறிக்கை ஒன்றை தயார்செய்து கூட்டங்களின் போது சபைக்கு முன்னிலைப்படுத்தவேண்டும். பொருளாளர் வருடாந்த நிதிக்கணக்கறிக்கை ஒன்றை தயார்செய்து வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது சபைக்கும் அங்கத்தவர்களுக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

11.6.4 பிரதான மற்றும் சிறியதான இரண்டு காசுப்புத்தகங்களைப் பேணுதலும் செயற்குழுவினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரினால் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருதடவை கணக்குகளை கணக்காய்வு செய்வித்தலும் வேண்டும்.

11.6.5 பரிசோதனைக்காக அறக்கட்டளையினுடைய தலைவர் / செயலாளருக்கு அறக்கட்டளையினுடைய கணக்குகளை கேட்கின்ற பொழுது கையளித்தல் வேண்டும்.

11.7 உதவிப்பொருளாளர் : குழுவின் உதவிப்பொருளாளர் பொருளாளருக்கு அவரின் கடமைகளில் உதவ வேண்டும் என்பதுடன் அவரின் வரவின்மையின்போது அவருக்காக செயற்படவும் வேண்டும்.

**ஷரத்து 12 : சபையின் அங்கத்தவர்களைத் தீர்மானித்தல்**

12.1 பின்வருவன பூர்த்தி செய்யப்பட்டால் மாத்திரமே அங்கத்தவர் ஒருவர் சபைக்கு தெரிவுசெய்யப்படலாம்

12.1.1 வருடாந்த, ஐந்து வருட அல்லது ஆயட்கால சந்தாப்பணத்தினை தேர்தலுக்கு அல்லது நியமனத்திற்கு ஆகக் குறைந்தது இரண்டு வருடங்களுக்கு முன்னரான காலப்பகுதிக்கு முழுமையாகக் கொடுப்பனவு செய்திருத்தல் வேண்டும்.

12.1.2 இந்து சமயம், தமிழ்மொழி, தமிழ்கலாச்சாரம் மற்றும் மில்ரன் கீனஸில் உள்ள தமிழ் சமூகத்தினுடைய அபிவிருத்தியை முன்னெடுப்பதில் ஆர்வமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

12.2 பின்வருவனவற்றின் அடிப்படையில் அங்கத்தவர் ஒருவரின் அங்கத்துவம் முடிவுறுத்தப்படலாம்

12.2.1 1992ஆம் வருட தருமஸ்தாபனச்சட்டம் பிரிவு 45இன் கீழ் (அல்லது அதனுடைய மீள்திருத்தம் செய்யப்பட்ட அல்லது மாற்றப்பட்ட ஷரத்தின் கீழ்) தகுதியற்றிருத்தல்

12.2.2 மனநிலை ஒழுங்கீனத்தினால், சுகவீனத்தினால் அல்லது காயத்தினால் தன்னுடைய சொந்த விவகாரங்களை நிருவகிப்பதற்கு ஆற்றல் அற்றிருத்தல்.

12.2.3 இராஜினாமா செய்வதாக சபைக்கு அறிவித்திருத்தல்.

**ஷரத்து 13 : சபையினுடைய கூட்டங்களும் செயலாற்றுகையும்**

13.1 சபையானது வருடமொன்றுக்கு ஆகக்குறைந்தது மூன்று சாதாரண கூட்டங்களை நடத்த வேண்டும். ஏனைய அங்கத்தவர்களுக்கு கலந்துரையாடப்படவேண்டிய விடயம் தொடர்பாக மூன்று (3) நாட்களுக்குக் குறையாத முன்னறிவித்தல் கொடுத்து தலைவரினால் அல்லது சபையினுடைய யாராவது இரண்டு அங்கத்தவர்களினால் விசேட கூட்டம் ஒன்று கூட்டப்படலாம்.

13.2 செயற்குழுவானது தேவையேற்படுமிடத்து கூட்டப்படமுடியுமென்பதுடன் இது தலைவரினால் தீர்மானிக்கப்படும்.

13.3 தலைவரும் உபதலைவரும் கூட்டம் ஒன்றுக்கு வருகைதராதவிடத்து வருகைதந்துள்ள அங்கத்தவர்களில் இருந்து தற்காலிக தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

13.4 கூட்டம் ஒன்றினைக் கூட்டுவதற்கு ஆகக்குறைந்தது மூன்றில் ஒரு பங்கு அல்லது ஏழு (இதில் எது குறைவானதோ) அங்கத்தவர்கள் வருகைதந்திருத்தல் வேண்டும்.

13.5 அனைத்து விடயங்களும் வருகைதந்திருக்கின்ற அங்கத்தவர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் தீர்மானிக்கப்படும் எனினும் சமமான வாக்குகள் வரும் சந்தர்ப்பத்தில் கூட்டத்தின் தலைவர் இரண்டாவது அல்லது தீர்மானிக்கும் வாக்கொன்றினை அளிக்கலாம்.

13.6 சபையும் செயற்குழுவும் சபைக்கூட்ட அறிக்கைகளையும் குழுக்கூட்ட அறிக்கைகளையும் பிரத்தயேகமாக அதற்காக உள்ள புத்தகமொன்றில் அல்லது இலத்திரனியல் உருவில் பதிந்து வைத்திருக்க வேண்டும்.

13.7 சபையானது காலத்திற்குக் காலம் தமது நடவடிக்கைகளுக்காகவும் கூட்டங்களை கூட்டுவதற்காகவும் ஆவணங்களைப் பாதுகாப்பதற்காகவும் விதிகளை உருவாக்கவும் மாற்றியமைக்கவும் முடியும். இந்த யாப்பிற்கு முரணானதாக எந்தவொரு விதியையும் உருவாக்க முடியாது.

13.8 விசாரணை செய்வதற்காக அல்லது மேற்பார்வை செய்வதற்காக அல்லது ஏதாவது ஒரு நிகழ்வினைச் செய்வதற்காக உபகுழு ஒன்று சிறப்பாகச் செயற்படமுடியும் என சபை கருதுகின்றபொழுது செயற்குழுவானது மூன்று அல்லது மூன்றிற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உபகுழுக்களை நியமிக்க முடியும். உபகுழுவினுடைய அனைத்து அறிக்கைகளும் முழுமையாகவும் சரியாகவும் சபைக்கு அறிவிக்கப்படவேண்டும்.

13.9 நியமிக்கப்பட்ட மற்றும் கௌரவ அங்கத்தவர்களுடைய அங்கத்துவமானது கூட்டம் நடத்துவதற்கு தேவையான அங்கத்தவர்களுடன் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் வருகை தந்திருந்த அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின்மூலம் சபையினால் இரத்துச் செய்யப்படலாம்.

## ஷரத்து 14 : கணக்குகளும் வருடாந்த அறிக்கையும்

பின்வருவன தொடர்பாக சபையானது 2006ம் வருட தருமஸ்தாபனச்சட்டம் அல்லது அதனுடைய மீள்திருத்தம் செய்யப்பட்ட அல்லது மாற்றப்பட்ட ஷரத்தின் கீழ் கட்டுப்பட்டு இணங்க வேண்டும்.

14.1 ‘மில்ரன் கீனஸ் முருகன் ஆலயம்’ என்னும் பெயரில் மூன்று அங்கத்தவர்கள் (பொருளாளர், செயலாளர் மற்றும் சபையினுடைய ஸ்தாபக ஆயுட்கால தர்மகர்த்தா ஒருவர்) கையொப்பம் இடுபவர்களாகவும் எந்தவொரு நேரத்திலும் வங்கியில் இருந்து பணத்தினை மீளப்பெறுவதற்கு ஆகக்குறைந்தது இரண்டு கையொப்பங்கள் தேவையாகவும் இருக்கும்வண்ணம் வங்கிக்கணக்கொன்றினை உள்ளூர் வங்கியொன்றில் அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட சங்கமொன்றில் ஆரம்பித்து பராமரித்தல் வேண்டும்.

14.2 ஐம்பது பவுணுக்கு மேற்பட்ட எல்லா செலவீனங்களுக்கும் சபையினுடைய அல்லது செயற்குழுவினுடைய அநுமதியளிக்கப்பட்டும் கூட்ட அறிக்கையில் பதியப்பட்டும் இருத்தல் வேண்டும்.

14.3 ஆலயத்தின் கணக்குகளை அன்றன்றைக்கு சரிசெய்து வைத்திருத்தல் வேண்டும்.

14.4 ஆலயத்தின் வருடாந்த நிதிக்கணக்கறிக்கை ஒன்றை தயார்செய்து வைத்திருத்தலும் சுயாதீன கணக்காய்வாளரினால் வருடாந்த நிதிக்கணக்கறிக்கையை பரிசீலனை செய்து வைத்திருத்தலும் வேண்டும்.

14.5 ஆலயத்தின் வருடாந்த நிதிக்கணக்கறிக்கையையும் வருடாந்த அறிக்கையையும் தருமஸ்தாபனங்களின் ஆணையாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**ஷரத்து 15 : வருடாந்த பொதுக்கூட்டம்**

15.1 ஆலயத்தின் தர்மகர்த்தாக்கள் சபையானது இந்த யாப்பினை ஏற்றுக்கொண்ட பன்னிரெண்டு மாதங்களுக்குள் பொதுக்கூட்டமொன்றினை நடத்த வேண்டும்.

15.2 தொடர்ந்து வருகின்ற ஒவ்வொரு வருடத்திலும் இரண்டு அடுத்தடுத்த வருடாந்த பொதுக்கூட்டங்களுக்கு இடையே பதினைந்து மாதங்களுக்கு மேற்படாத காலம் இருக்குமாறு வருடாந்த பொதுக்கூட்டமொன்றினை நடத்த வேண்டும்.

15.3 ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டமும் சபையினால் கூட்டப்பட வேண்டும். ஆலயத்தின் அங்கத்தவர்கள் அனைவருக்கும் செயலாளரினால் வருடாந்த பொதுக்கூட்டம் தொடர்பாக இருபத்தியொரு (21) நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும். ஆலயத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் வாக்களிக்கவும் உரிமையுள்ளவர்கள்.

15.4 வருடாந்த பொதுக்கூட்டம் அல்லாத அனைத்து பொதுக்கூட்டங்களும் விஷேட பொதுக்கூட்டம் என அழைக்கப்படும்.

15.5 அறிவித்தலில் கூட்டம் நடக்கவிருக்கின்ற திகதி, நேரம், இடம் மற்றும் கலந்துரையாடப்படவேண்டிய பொதுவிடயங்கள்பற்றி குறிப்பிடப்பட வேண்டும்.

15.6 ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டத்திலும் அதற்கு நேர்முந்தைய வருடத்தின் ஆலயத்தினுடைய கணக்கறிக்கையானது முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

15.7 கௌரவ தர்மகர்த்தாக்களுக்கான தேர்தலினை தேவைக்கேற்றவாறு ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டத்திலும் நடத்த வேண்டும்.

15.8 தர்மகர்த்தாக்களுக்கான தேர்தலுக்கான வேட்பாளர் நியமனத்தினை வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு ஆகக்குறைந்தது பதினான்கு (14) நாட்களுக்கு முன்னதாக சபையின் செயலாளருக்கு கிடைக்குமாறு எழுத்து மூலமாக அறக்கட்டளையினுடைய அங்கத்தவர்கள் மூலம் செய்ய வேண்டும். வேட்பாளர் நியமனமானது வெற்றிடங்களைவிட கூடுதலாக இருக்குமிடத்து வாக்குச்சீட்டின் மூலம் தேர்தலினை நடத்த வேண்டும்.

15.9 ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டத்திலும் நிதிக்கணக்குகளை கணக்காய்வு செய்யும் சுயாதீன கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

**ஷரத்து 16 : விஷேட பொதுக்கூட்டம்**

சபையானது எந்தவொரு நேரத்திலும் விஷேட பொதுக்கூட்டமொன்றிற்கு அழைப்பு விடுக்கலாம். ஆகக்குறைந்தது பத்து அங்கத்தவர்கள் கலந்துரையாடப்படவேண்டிய விடயத்தைப்பற்றி குறிப்பிட்டு அவ்வாறான கூட்டமொன்றினை நடத்த எழுத்து மூலம் கேட்குமிடத்து செயலாளரானவர் தலைவருடன் ஆலோசித்து அவ்வாறான கூட்டமொன்றிற்கு அழைப்பு விடுக்க வேண்டும். ஆகக்குறைந்தது பதினான்கு (14) நாட்கள் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். கலந்துரையாடப்படவேண்டிய விடயம் அறிவித்தலில் கொடுக்கப்பட வேண்டும்.

**ஷரத்து 17 : அறிவித்தல்கள்**

17.1 அறக்கட்டளையினுடைய யாராவது அங்கத்தவரொருவருக்கு கொடுக்கப்படவேண்டிய ஏதாவது ஒரு அறிவித்தலானது செயலாளரினால் எழுத்து மூலமாக நேரடியாக கொடுக்கப்படலாம் அல்லது அங்கத்தவருக்கு ஐக்கிய இராச்சியத்தில் உள்ள அவருடைய அல்லது அவளுடைய தெரிந்த விலாசத்துக்கு முகவரியிட்டு தபாலிலிடப்பட்டு பத்து நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்படும் என எதிர்பார்த்து தபாலிலிடப்பட வேண்டும்.

17.2 சாத்தியமான வேளைகளில் பெற்றுக்கொள்பவரின் முன் அனுமதியுடன் இலத்திரனியல் தபால்முறை பாவிக்கப்படலாம்.

**ஷரத்து 18 : யாப்பில் மாற்றம் செய்தல்**

18.1 இந்த ஷரத்தினுடைய பின்வரும் உபவிதிகளுக்குட்பட்டு பொதுக்கூட்டத்திற்கு வருகைதந்திருந்து வாக்களிக்கின்ற அங்கத்தவர்களின் மூன்றில் இரண்டுக்கு குறையாத பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படுவதன் மூலம் யாப்பானது மாற்றம் செய்யப்படலாம். பொதுக்கூட்டத்திற்கான அறிவித்தலானது தீர்மானம் தொடர்பான அறிவித்தலையும் உள்ளடக்க வேண்டும் என்பதுடன் பிரேரிக்கப்பட்டுள்ள மாற்றத்தினையும் குறிப்பிடவேண்டும்.

18.2 ஆணையாளர்களின் எழுத்துமூலமான ஒப்புதலில்லாமல் ஷரத்து 1 (பெயர் - மில்ரன் கீனஸ் முருகன் ஆலய அறக்கட்டளை), ஷரத்து 4 (குறிக்கோள்கள்,) ஷரத்து 19 (இல்லாதாக்குதல்) அல்லது இவ்விதியில் எந்தவொரு மாற்றமும் செய்யப்படலாகாது.

18.3 சட்டத்தின்படி அறக்கட்டளையினை தர்மஸ்தாபனமில்லாததாக்கும் நிலையை தோற்றுவிக்கக்கூடிய எந்தவொரு மாற்றமும் செய்யப்படலாகாது.

18.4 சபையானது இந்த ஷரத்தின்படி ஏற்படுத்தப்படுகின்ற எந்தவொரு மாற்றத்தினையும் முறையாக ஆணையாளர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

**ஷரத்து 19 : இல்லாததாக்குதல்**

19.1 சபையானது அறக்கட்டளையினையும் அதனோடிணைந்த நிலையத்தினையும் இல்லாததாக்குதல் தேவையானது அல்லது தகுதியானது எனத்தீர்மானித்தால், தீர்மானம் தொடர்பான விடயத்தைக் குறிப்பிட்டு 21 நாட்களுக்கு குறையாத அறிவித்தல் கொடுத்து பொதுக்கூட்டமொன்றிற்கு அழைப்பு விடுக்க வேண்டும். பிரேரணையானது பொதுக்கூட்டத்திற்கு வருகைதந்திருந்து வாக்களிக்கின்ற அங்கத்தவர்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்டால் ஆலயத்தினது அல்லது ஆலயம் தொடர்பான எந்தவொரு சொத்தையும் விற்றுப்பணமாக்கும் அதிகாரத்தை சபையானது கொண்டிருக்கும். எந்தவொரு முறையான பொறுப்புக்களையும் பற்றுக்களையும் திருப்தியாகக் கொடுத்தபின்னர் ஏதாவது சொத்துக்கள் மீதமிருந்தால் அச்சொத்துக்கள் அதே கூட்டத்தின் அங்கத்தவர்களின் தீர்மானத்தின்படி இந்த ஆலயத்தினுடைய குறிக்கோள்களைப் போன்ற குறிக்கோள்களையுடைய நிறுவனம் அல்லது நிறுவனங்களுக்கு கொடுக்கப்படலாம் அல்லது மாற்றப்படலாம். உறுதியான தீர்மானம் ஒன்று எட்டப்படாதுவிடின் சபையானது பெரும்பான்மைத் தீர்மானம் ஒன்றின்படி சொத்துக்களை வேறு தருமஸ்தாபன தேவைகளுக்கு பிரயோகிக்கலாம். அறக்கட்டளையினுடைய இறுதி கணக்கறிக்கைக் காலத்துக்கான நிதிக்கணக்கறிக்கை / நிதிக்கணக்கறிக்கைகளினதும் அறிக்கையினதும் பிரதியொன்று ஆணையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

19.2 எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆலயத்தினுடைய நிகர சொத்துக்களை அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவு செய்தலோ பிரித்துக்கொடுத்தலோ ஆகாது.

**ஷரத்து 20 : மொழிபெயர்த்தல்**

20.1 பாராளுமன்ற சட்டத்தினை மொழிபெயர்க்க *1978ஆம் வருட மொழிபெயர்ப்புச் சட்டம்* பிரயோகிக்கப்படுவதைப் போன்று இந்த யாப்பினை மொழிபெயர்க்கவும் பிரயோகிக்கப்படும்.

20.2 ஒருமைக் கருத்தினைத்தரும் சொற்கள் பன்மைக் கருத்தினையும் உள்ளடக்கும் என்பதுடன் அதன் மறுதலையும் ஏற்புடையதாகும்.

20.3 ஆண்பால் கருத்தினைத்தரும் சொற்கள் பெண்பால் கருத்தினையும் உள்ளடக்கும்.

**ஷரத்து 21 : இந்த யாப்பினை ஏற்றுக்கொள்ளுதல்**

சபையானது கையொப்பமிட்டு இந்த யாப்பினை ஏற்றுக்கொண்ட ஒரு மாதத்தினுள் தர்மகர்த்தாக்கள் சபையானது 'சொத்து விபரப்புத்தகம்' ஒன்றினை ஆரம்பித்து ஆலயத்தினுடைய சொத்துக்களின் விபரப்பட்டியலைத் தயாரிக்க வேண்டும். சொத்து விபரப்புத்தகம் ஒழுங்கான முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்பதுடன் சட்டரீதியாக தகவல்களை கோரும் எவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கவும் வேண்டும்.

இந்த யாப்பானது ......................ம் திகதியன்று தாமாகவே கையொப்பமிட்ட இந்த ஐந்து பேரினாலும் இதன் கீழே கையொப்பமிட்டுள்ள மற்றையவர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1. பெயர் :
   முகவரி :
   கையொப்பம் :

2. பெயர் :
   முகவரி :
   கையொப்பம் :

3. பெயர் :
   முகவரி :
   கையொப்பம் :

4. பெயர் :
   முகவரி :
   கையொப்பம் :

5. பெயர் :
   முகவரி :
   கையொப்பம் :

**அநுபந்தம் 1**

(இந்த பக்கமானது யாப்பினுடைய தொடர்ச்சியான ஒரு பகுதி என்பதுடன் அவ்வாறே அர்த்தம் கொள்ளப்படவும் வேண்டும்).

**முதலாவது முன்னுரிமையுள்ள ஆயுட்கால தர்மகர்த்தாக்கள்** :

1. கலாநிதி மயில்வாகனம் வீரவாகு
2. கலாநிதி (திருமதி) இரத்தினேஸ்வரி வீரவாகு
3. திரு பொன்னையா தேவகுமரன்
4. திருமதி செல்வராணி தேவகுமரன்
5. திரு கிருஸ்ணர் கமலநாதன்
6. திருமதி சிவமணி கமலநாதன்
7. திரு சின்னையா சற்குணநாதன்
8. திருமதி புஷ்பலதா சற்குணநாதன்
9. திருமதி கௌரிமலர் சத்தியசீலன்
10. திரு செல்லையா கோபாலகிருஸ்ணசாமி
11. திருமதி இரஞ்சிதமலர் கோபாலகிருஸ்ணசாமி